**தேசிய பெருந்தெருக்கள் துறைச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - 2020**

---

தேசிய பெருந்தெருக்கள் துறைச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2767 எஸ்ஆர்ஐ இலக்க 2011 திசெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையின் உறுப்புரை II இன் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், அப்போதைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளது. அண்ணளவாக 62 கிலோ மீற்றர் தேசிய பெருந்தெருக்களை தரமுயர்த்துதல், புனரமைத்தல் மற்றும் மீள ஒருங்கிணைத்தல் மூலம் தேசிய போக்குவரத்தின் செயற்திறனை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,728 மில்லியனுக்குச் சமனான யு.எஸ்.டொலர் 105.60 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா. 11,050 மில்லியனுக்குச் சமனான யூ.எஸ்.டொலர் 85 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2011 திசெம்பர் 14 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல்படுத்தப்பட்டு 2017 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 வரை கூட அதன் நடவடிக்கைகளை முடிவுறுத்தாமல் தொடர்ந்து செயற்படுகின்றது.

## 1.3 அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், ஹிக்கடுவ - நுகேகொட வீதியிலிருந்து தெற்கு அதிவேகப்பாதையுடன் நேரடியாக தொடர்புபட்ட 02 தேசிய வீதிகளின் 60 கி.மீகள் மற்றும் மாத்தறை – கொடகம வீதி, கட்டுகுருந்த – நாகொட வீதி கிருலப்பனை – கொடகம வீதி மற்றும் பாமன்கட – கெஸ்பேவ வீதி போன்ற ஏனைய 04 தேசிய வீதிகள் போன்றவற்றினை மேம்படுத்தி புனரமைக்க பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், அவ்வீதிகளின் 58.96 கி.மீகளின் புனரமைப்பு வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறே பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மாத்தறை – கொடகம வீதியின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைகள் திட்டமிடப்பட்டபடி பூர்த்திசெய்யப்பட்டிருந்த அதேவேளை ஏனைய வீதிகளின் செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளின் தாமதம் காரணமாக, 172 நாட்கள் தொடக்கம் 338 நாட்கள் என்ற வீச்சிலான தாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

### 2.2 புரநடையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| செயற்திட்டமானது தென்மாகாணத்திலுள்ள காலி – பத்தேகம வீதியின் 17.60 கி.மீகளின் புனரமைப்பிற்கான காணி கொள்வனவிற்காக மொத்தமாக ரூபா 18.33 மில்லியன் செலவலித்திருந்தும், வீதியின் உரிய பிரிவுகளின் புனரமைப்பு வேலைகள் அதன் மீதான பற்றாக்குறையான 08 ஏற்பாடுகளினால் செய்யப்படாமல் காணப்பட்டது. | கடன் தொகையானது அனைத்து ஏழு ஒப்பந்தபொதிகளினையும் (சீபி1 – சீபி7) பூர்த்திசெய்ய போதுமானதாக காணப்படவில்லை. எனவே, காலி – பத்தேகம வீதியின் நிர்மானம் இக்கடனின் கீழ் செய்யமுடியாமல் போகக்கூடும். | செயற்திட்டத்தின் வேலைப்பரப்பு பின்பற்றப்படல் வேண்டும். |

## 2.3 காணி சுவிகரிப்பு மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 1362 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 7632 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது, அதில் இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதத்தின் மீதான வட்டி உள்ளடங்களாக ரூபா 7,158 மில்லியன் தொகையான இழப்பீடு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5741 காணித்துண்டுகளிற்காக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1986 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு மற்றும் மீள வழங்கல் சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் எவ்வித காணித்துண்டுகளிற்குமான கொள்வனவு செயன்முறையை பூர்த்திசெய்திருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் மீதி காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் செலவு மதிப்பீடு செய்யப்படாமல் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாங்கள் பிரிவு 44 இனை வழங்க ஏற்கனவே செயன்முறையை ஆரம்பித்துள்ளதுடன் வட்டி கொடுப்பனவிற்கான இழப்பீட்டு கொடுப்பனவிற்காக அது செய்யப்பட்டிருக்கும். மிகுதி காணி நடவடிக்கைகள் ஆர்டிஏவிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அதற்கான செலவு மதிப்பீடு செய்து கொண்டிருக்கின்றோம். மேற்கூறிய செலவு மதிப்பீடு 2021 நவம்பரிற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும். | காணி கொள்வனவு மீதான கவனம் உடனடியாக தேவைப்படுகின்றது. |

## 2.4 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| கடன் வழங்கும் முகவரினால் செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீட்டில் 7.20 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 923 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 6.12 மில்லியன் ஒதுக்கீடு சிவில் நிர்மான வேலைகளின் தாமதத்தின் காரணமாக செயற்திட்ட காலப்பகுதி முடிவில் பயன்படுத்த முடியாமல் போவதுடன் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் 2017 செப்தம்பர் 11 இல் கடன் வழங்கும் முகவரிற்கு மீளசெலுத்தப்பட்டிருந்தது. | கடன் தொகை அனைத்து ஏழு ஒப்பந்த பொதிகளினையும் (சீபி1 – சீபி7) பூர்த்தி செய்ய போதாமலிருந்தது. | நிர்மான வேலைகள் அவைகளை செயற்திட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்ய முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |